தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

சென்னை - 600 006.

ந.க.எண்.40207/ சி5/ இ4/2015, நாள்.07.03.2019

-----

பொருள்: பள்ளிக் கல்வி – உடற்கல்வி/ தையல்/ இசை/ஓவியம் ஆசிரியர் நேரடி நியமனம் தற்போதையநிலவரப்படி (As on Vacancies) காலிப்பணியிட விவரங்கள் கோருதல்- சார்பு.

பார்வை: தமிழ்நாடுபள்ளிக்கல்விஇணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள்ந.க.எண்.ந.க.எண்.40207 / சி5 / இ4 / 2015 நாள்.01.11.2018

-----

உடற்கல்வி/ தையல்/இசை/ ஓவியம் ஆசிரியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்கான தெரிவுப்பட்டியல் ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் பெறப்படவுள்ளது. விரைவில் கலந்தாய்வு நடைபெறவுள்ளதால் 06.03.2019 நிலவரப்படி அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள உடற்கல்வி/ தையல்/இசை/ ஓவியம் ஆகிய சிறப்பாசிரியர் காலிப்பணியிட விவரங்களை, காலிப்பணியிடங்கள் ஏதும் விடுபடவில்லை என்ற சான்றுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இதில் குறிப்பாக 19.06.2018 அன்று நடைபெற்ற பணிமாறுதல் கலந்தாய்விற்கு பின் Resultant vacancies, இணைப்பில் உள்ள படிவத்தில் கண்டுள்ளவாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் இத்துடன் அனுப்பப்படுகிறது. இதனை சரிபார்த்து உறுதிசெய்து, Gender ஆண்/ பெண் பள்ளிகள் விவரம் விடுபடாமல் காலிப்பணியிடங்களில் ஏதேனும் மாற்றம்/திருத்தம்/நீக்கம் இருப்பின் அதனை தனியாக (அந்த அந்த பாடங்களின் கீழ் கடைசியாக காரணத்துடன்) குறிப்பிட்டு இக்காலிப் பணியிட விவரங்களை, 08.03.2019 மாலை 5 மணிக்குள் சி5 பிரிவு மின்னஞ்சல் (c5sec.tndse@nic.in) முகவரிக்கு அனுப்பி வைத்திடுமாறும், மேலும் முதன்மைக்கல்வி அலுவலரின் ஒப்பத்துடன் கூடிய கடிதத்தின் ஒளி நகலினை (Scanned Copy) அஞ்சல் வழியாகவும் அல்லது இவ்வியக்ககத்திற்கு வரும் தனிநபர்கள் மூலம் உடனடியாக அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதுமிகவும்அவசரம்

இணைப்பு: Resultant vacancies ஒம் முனைவர். க.நாகராஜமுருகன்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர் :

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

(குறிப்பு தையல், இசை, ஓவியம்.

உடற்கல்விஆசிரியர்காலிப்பணியிட விவரங்களைதனித்தனிதாளில்தயார்செய்துExcel format-ல்சி5 பிரிவுமின்னஞ்சல்(c5sec.tndse@nic.in) முகவரிக்கு08.03.2019 மாலை 5 மணிக்குள்அனுப்பிவைக்குமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.)